[10th April 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ராமநாதபுரம் கமிட்டி சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அது செயல்படுவது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது.

Textile mills.

* 690 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to start Textile mills at Srivilliputhur in the Ramanathapuram district; and

(*b*) the estimated cost thereof and the subsidy, if any, sanctioned therefor by the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Government of India have proposed to grant licence under the Industries (Development and Regulation) Act, 1951 to the Ramanathapuram Co-operative Spinning Mills, Srivilliputhur. But formal licence has not yet been issued. The first Board of Directors of the Mill has been nominated by the Registrar of Co-operative Societies. The Board is taking steps to select a site for the location of the mill and for the purchase of machinery for the proposed mill but nothing has been finalised yet.

(*b*) The approximate cost for the establishment of the mill will be Rs. 36 lakhs. The Government do not sanction any subsidy as such to Co-operative Spinning Mills.

SRI K. RAMACHANDRAN : இந்த ராமநாதபுரம் ஜில்லாவில் வைக்கப்பட வேண்டிய மில் அருப்புக்கோட்டையில் வைக்கவேண்டுமென்றிருந்தது. அது ஏன் கைவிடப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் வைக்கப்படப் போகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : எனக்குத் தகவல் ஆரம்ப முதற்கொண்டே ஸ்ரீவில்லிபுத்தூரில் வைப்பதாகத் தான் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்போதே கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கும்போது, இன்னும் ஆலைகளைத் துவக்கி அவைகள் உற்பத்தி செய்தால், கைத்தறியை பாதிக்குமல்லவா ? இதை உணர்ந்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது நூல் ஆலை.

SRI M. D. RAMASWAMI : அருப்புக்கோட்டையில் ஒரு நூல் ஆலையை ஏற்படுத்த சர்க்கார் யோசனை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது ஒரு யோசனை. அவ்வளவுதான் சொல்ல முடியும்.

MR. SPEAKER : அடுத்த கேள்வி 691-ம் கேள்வி.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார், ஒரு விஷயத்திற்கு . . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தனி கேள்வி கேட்கலாம்.

House-sites for Harijans

* 691 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) how many cases of acquisition of land for house-sites in respect of (i) South Arcot district and (ii) Tindivanam taluk, are pending with the Harijan Welfare Department;

10th April 1958]

(b) the reasons for the delay; and

(c) the action taken by the Government to expedite these cases?

THE HON. SRI P. KAKKAN : (a) Fifty-seven cases are pending in the South Arcot District of which 9 cases relate to Tindivanam taluk.

(b) & (c) It is reported that the delay is due to the inadequacy of the staff attending to the Land Acquisition work and that the question of strenghening this staff has been taken up.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, இந்த கட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து ஹரிஜனங்களுக்கு வழங்கும் விஷயத்தில் அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. உடனடியாக நில ஆர்ஜிதம் செய்யும் சிப்பந்திகளை அதிகப்படுத்தி ஹரிஜனங்களுக்கு நிலங்களை வழங்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : கட்டு மனைகள் வழங்குவதிலே அரசாங்கம் அதிக அக்கரை எடுத்து வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Agricultural College

* 692 Q.—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to start a new Agricultural College?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Mudukulathoor area

* 693 Q.—DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the beneficial measures adopted by the Harijan Welfare Department in the Mudukulathoor area after the recent disturbances; and

(b) the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes Sir.

(b) the Government have ordered the construction of houses for the riot-affected persons in the whole of the Ramanathapuram district including Mudukulathoor area at an estimated cost of Rs. 16·92 lakhs. They have also sanctioned the starting of a Co-operative Match Factory and a Brick Makers' Co-operative Society at Paramakudi for the benefit of the riot-affected persons. 9-20 a.m.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : முதுகளத்தூர் கலவரத்திற்கு காரணம், போக்குவரத்திற்கு சரியான ரோடுகள் இல்லை என்றும், தனிப்பட்ட போலீஸ் ஸ்டேஷன் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டது. இதில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் கணிசமாக இருந்தால் ஆதிக்க வெறி ஏற்படுகிறது, அது பரவலாக அமைக்கப்பட வேண்டும் என்று முதுகளத்தூர் கலவரம் சம்பந்தப்பட்ட விவாதத்தின் போது யோசனை கூறப்பட்டது. அதைப்பற்றி சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா ?